முதல்வருடன் பிரேமலதா சந்திப்பு...

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை வியாழக்கிழமை சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தறிந்த தேமுதிக பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த். உடன், முதல்வரின் மனைவி துர்கா ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ், துணைச் செயலர் பி.பார்த்தசாரதி. இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் எ.வ.வேலு உடனிருந்தனர். பிரேமலதா தன்னைச் சந்தித்து உடல்நலம் குறித்து கேட்டறிந்ததற்காக அவருக்கு முதல்வர் ஸ்டாலின் நன்றி தெரிவித்து 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மருத்துவத் திட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பெயர்: தடை விதிக்க உயர்நீதிமன்றம் மறுப்பு

சென்னை, ஜூலை 31: 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்ற மருத்துவத் திட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பெயரைப் பயன்படுத்த தடை விதிக்க மறுத்த சென்னை உயர்நீதிமன்றம், அரசு விளம்பரங்களை வெளியிடும்போது உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களைப் பின்பற்ற உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் அதிமுக மாநிலங்களவை உறுப்பினர் சி.வி.சண்முகம் மற்றும் வழக்குரைஞர் இனியன் ஆகியோர் தாக்கல் செய்த பொதுநல மனுவில், தமிழக அரசு வெளியிட்டுள்ள 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட விளம்பரத்தில் அரசு முத்திரை இடம்பெற்றுள்ளது. அதில் முன்னாள் முதல்வர் கருணாநிதி மற்றும் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோரது படங்களும் இடம்பெற்றுள்ளன. இது உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது. தனிமனித சாதனையைப் போல அரசு திட்டத்தை விளம்பரப்படுத்துவது தவறானது.

அரசியல் காரணங்களுக்காக அரசு நிதி கோடிக்கணக்கில் செலவு செய்யப்படுகிறது. இந்த திட்டம் முற்றிலும் அரசியல் நோக்கம் கொண்டது. உங்களுடன் ஸ்டாலின் திட்ட விளம்பரத்தில் கூறப்பட்டுள்ள தகவலுக்கும் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் படத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எனவே, கருணாநிதியின் புகைப்படத்தை பயன்படுத்துவது வழிமுறைகளுக்கு எதிரானது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலை மனதில் வைத்துதான் 'உங்களுடன் ஸ்டாலின் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தன்னார்வலர்கள் மூலம் இந்த திட்டம் செயல்படுத்துவதாக கூறினாலும், திமுகவினரே இந்த திட்டத்தில் அதிகளவில் உள்ளனர். எனவே, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் விளம்பரங்களில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் புகைப்படத்தை பயன்படுத்தவும், உங்களுடன் ஸ்டாலின் என்ற பெயரைப் பயன்படுத்தவும் தடை விதிக்க வேண்டும், என்று கூறியிருந்தனர்.

இந்த வழக்கு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது சி.வி.சண்முகம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் விஜய் நாராயண், உச்சநீதிமன்றம் மற்றும் தேர்தல் ஆணைய விதிகளுக்கு எதிராக, முதல்வரின் முகவரித் துறை சார்பில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற பெயரில் 10,000 முகாம்கள் நடத்தப்படுவதாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

அரசு விளம்பரங்களில் அரசியல் கட்சித் தலைவர்கள், கட்சி சின்னங்கள் இடம்பெறக்கூடாது என உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது. எனவே, அரசின் நிதியில் செய்யப்படும் விளம்பரங்களில் முதல்வர் ஸ்டாலினின் பெயரை பயன்படுத்தக்கூடாது. மேலும் வரும் சனிக்கிழமை தொடங்கப்படவுள்ள 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்ற மருத்துவ திட்டத்துக்கும் மு.க.ஸ்டாலின் பெயரை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும், என்று வாதிட்டார்.

அப்போது அரசுத் தரப்பில் ஆஜரான அரசு தலைமை வழக்குரைஞர் பி.எஸ்.ராமன், அரசுத் திட்டங்கள் தொடர்பான விளம்பரங்களில் முதல்வர் படங்கள் மட்டுமல்ல, துறை அமைச்சர்களின் படங்களும் இடம்பெறலாம் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள தலைவர்களின் படங்கள், கட்சி சின்னம் அடங்கிய விளம்பரம் அரசு விளம்பரம் அல்ல. அப்படியொரு விளம்பரத்தை அரசு கொடுக்கவில்லை. அரசு வெளியிடும் விளம்பரங்களில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் வரிசை எண் இருக்கும், எனக்கூறி அரசு வெளியிட்ட விளம்பரங்கள் தொடர்பான நாளிதழ்களை தாக்கல் செய்தார்.

அப்போது திமுக தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் பி.வில்சன், ஏற்கெனவே கடந்த ஆட்சியில் அம்மா உணவகம் உள்பட பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டன.

மனுதாரர்கள் அரசியல் உள்நோக்கத்துடன் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளனர். பிரதமர் நரேந்திர மோடியின் பெயரில் மத்திய அரசின் சார்பில் நமோ திட்டங்கள் தொடங்கப்பட்டன என்று வாதிட்டார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், அரசு விளம்பரங்கள் வெளியிடும்போது உச்சநீதிமன்றத் தீர்ப்பு வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்ற வேண்டும். இந்த வழக்கில் தமிழக அரசு, இந்திய தேர்தல் ஆணையம், திமுக பதிலளிக்க உத்தரவிட்டனர்.

மேலும், 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்ற மருத்துவத் திட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பெயரைப் பயன்படுத்த தடை விதிக்க மறுத்த நீதிபதிகள், இந்த வழக்கின் விசாரணையை 2 வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.

133 புதிய துணை மின்நிலையங்கள் அமைக்க ஒப்பந்தப்புள்ளி

சென்னை, ஜூலை 31: தமிழகத்தில் உள்ள 12 மண்டலங்களில் 133 புதிய துணை மின்நிலையங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளியை மின்வாரியம் கோரியுள்ளது.

தமிழகத்தில் அதிகரித்து வரும் மின்தேவைக்கு ஏற்ப மின்கட்டமைப்பை வலுப்படுத்தும் முயற்சியில் தமிழ்நாடு மின்வாரியம் ஈடுபட்டு வருகிறது. இதன்படி, பசுமை எரிசக்தி

துறைமூலம் காற்றாலை மற்றும் சூரிய மின் உற்பத்தி செய்தல், அதற்கான மின்சேமிப்பு அமைப்புகளை நிறுவுதல் உள்ளிட்ட பணிகளை மின்வாரியம் செய்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக தமிழகம் முழுவதும் 12 மண்டலங்களில் ரூ.1319.78 கோடி மதிப்பில் 133 புதிய துணை மின்நிலையங்கள் அமைக்கவும், 11 மண்டலங்களில் ரூ.189.28 கோடி மதிப்பில் 52 புதிய மற்றும் கூடுதல் உயரழுத்த மின் மாற்றிகள் அமைக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னையில் 12 புதியமின்மாற்றிகளும், காஞ்சிபுரம், வேலூர் மண்டலங்களில் தலா 20 மின்மாற்றிகளும், கோவை மண்டலத்தில் 6, ஈரோடு மண்டலத்தில் 2, மதுரை மண்டலத்தில் 9, கரூர் மண்டலத்தில் 5, திருச்சி மண்டலத்தில் 14, தஞ்சை மண்டலத்தில் 12, திருநெல்வேலி மண்டலத்தில் 8, திருவண்ணாமலை மண்டலத்தில் 14, விழுப்புரம் மண்டலத்தில் 11 புதிய மின் மாற்றிகளும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இப்பணிகளை ஆக.10-ஆம் தேதிக்குள் முடித்து, புதிய துணை மின்நிலையங்களை அமைப்பது, கூடுதல் உயரமுத்தமின்மாற்றிகள் அமைக்கும் பணியை விரைந்து தொடங்கவும் மின்வாரிய தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தங்கம் பவுனுக்கு ரூ.320 குறைவு

சென்னை, ஜூலை 31: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வியாழக்கிழமை பவுனுக்கு ரூ.320 குறைந்து ரூ.73,360-க்கு விற்பனையானது.

ஆபரணத் தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கமாக இருந்து வந்த நிலையில், புதன்கிழமை பவுனுக்கு ரூ.480 உயர்ந்து ரூ.73,680-க்கு விற்பனையானது. தொடர்ந்து வியாழக்கிழமை தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.40 குறைந்து ரூ.9,170-க்கும், பவுனுக்கு ரூ.320 குறைந்து ரூ.73,360-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.2 குறைந்து ரூ.125-க்கும், கட்டி வெள்ளி (ஒரு கிலோ) ரூ.2,000 குறைந்து ரூ.1.25 லட்சத்துக்கும் விற்பனையானது.

சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

அறிவிப்பு – உடன் – சேர்க்கை – திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களுக்கான அறிக்கை

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் ("SMF") யூனிட்தாரர்கள் பின்வரும் மாற்றத்தை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டின் நாசிக் கிளை முகவரியில் மாற்றம்:

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களுக்கான பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்ளும் அதிகாரப்பூர்வ மையமாகக் குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் கிளை அலுவலக முகவரியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்:

தற்போதுள்ள முகவரி	புதிய முகவரி	நடைமுறைப்படுத்தும் தேதி
கடை எண். 1, ஸ்ரீநாத் அபார்ட்மெண்ட், பண்டிட் காலனி - லேன் எண். 3, ஷரன்பூர் சாலை, நாசிக் - 422 002. தொலைபேசி: 0253-2311142	அலுவலக எண். 101, 1வது தளம், ரூங்டா ஆர்கேட், எம். ஆர். தக்கர் சாலை, குல்கர்னி கார்டன் எதிரில், ஷரன்பூர் சாலை, நாசிக் - 422 002. தொலைபேசி: 0253-2311142	04-ஆகஸ்ட்-2025

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கியத் தகவல் குறிப்பாணை(கள்) / கூடுதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் மற்ற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கியத் தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தப் பிற்சேர்க்கை அவ்வப்போது திருத்தப்படுகிறது.

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: ஆகஸ்ட் 01, 2025

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
தொலைபேசி : 044 - 28332115. இணையதளம் : www.tvsholdings.com மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com
CIN : L64200TN1962PLC004792

30 ஜூன் 2025 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைத்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	தனித்தது			ஒருங்கிணைந்தது		
		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
		30.06.2025	30.06.2024	31.03.2025	30.06.2025	30.06.2024	31.03.2025
		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த வருமானம்	55.26	136.37	644.05	12,753.64	10,390.73	45,032.85
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	14.78	15.02	410.09	1,018.58	724.18	3,593.63
3	விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (நிறுத்தப்பட்ட செயல்பாடுகள் உட்பட)	14.78	15.02	410.09	1,018.58	732.28	3,616.12
4	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	12.90	12.82	352.16	675.36	481.03	2,409.25
5	நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம் / (நஷ்டம்)]	10.63	12.80	349.73	691.00	451.09	2,458.30
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-)	10.12	10.12	10.12	10.12	10.12	10.12
7	ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)	-	-	1,601.02	-	-	4,677.27
8	பங்கு பிரீமியம் கணக்கு	36.42	36.42	36.42	36.42	36.42	36.42
9	நிகர மதிப்பு	1616.50	1453.12	1,604.56	4,030.22	2,809.37	3,685.20
10	நிலுவையில் உள்ள கடன்	943.81	643.64	943.81	33,049.33	26,958.06	32,488.03
11	நிலுவையில் உள்ள திருப்பி எடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள்	-	-	-	-	-	-
12	கடன் சம விகிதாசாரம் (மடங்கு)	0.57	0.39	0.45	5.62	7.70	5.93
13	பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (அ) அடிப்படை (ரூபாயில்) (ஆ) டைல்யூட்டட் (ரூபாயில்)	6.38 6.38	6.34 6.34	174.06 174.06	165.85 165.85	107.20 107.20	575.41 575.41
14	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு			- பொருந்தாது -			
15	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு			- பொருந்தாது -			
16	கடன் சேவை அளிப்பு விகிதாசாரம்			- பொருந்தாது -			
17	வட்டி சேவை அளிப்பு விகிதாசாரம்			- பொருந்தாது -			
18	நடப்பு விகிதம் (மடங்கு)			- பொருந்தாது -			
19	நீண்ட கால கடன் விகிதம் செயல்பாட்டு மூலதனத்திற்கு (மடங்கு)			- பொருந்தாது -			
20	கணக்குகளின் மூலம் பெறவேண்டியவற்றிற்கு வராக்கடன் விகிதம் (மடங்கு)			- பொருந்தாது -			
21	நடப்பு பொறுப்புகளின் விகிதம் (மடங்கு)			- பொருந்தாது -			
22	மொத்த கடனுக்கு மொத்த சொத்துக்களின் விகிதம் (மடங்கு)	0.36	0.30	0.34	0.60	0.59	0.60
23	கடனாளிகளின் சுழற்சி விகிதம் (மடங்கு)			- பொருந்தாது -			
24	சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (மடங்கு)			- பொருந்தாது -			
25	செயல்பாட்டு இலாப விகிதம் (%)			- பொருந்தாது -			
26	நிகர இலாப விகிதம் (%)	23.34	9.40	54.68	5.30	4.59	5.35

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ம் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 33 மற்றும் 52ன் கீழ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளம் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.tvsholdings.com) ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
3. ஜூன் 30, 2025 உடன் முடிவடைந்த காலாண்டிற்கான நிறுவனத்தின் நிதிநிலை முடிவுகளை கீழே உள்ள QR குறியீட்டின் மூலம் அணுகலாம்.

இடம் : பெங்களூரு
தேதி : 31.07.2025

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
வேணு சீனிவாசன்
தலைவர்

STAR Health Insurance — Personal & Caring

ஸ்டார் ஹெல்த் அண்டு அலைடு இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
பதிவு அலுவலகம்: எண்.01, நியூ டேங்க் தெரு, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034
கார்ப்பரேட் அலுவலகம்: 148, அக்ரோபோலிஸ் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004
இணையதளம்: www.starhealth.in CIN: L66010TN2005PLC056649
IRDAI பதிவு எண். 129. இ-மெயில்: investors@starhealth.in

தபால் வாக்குப் பற்றிய அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம் 2013 (சட்டம்)-ன் பிரிவு 110 மற்றும் அத்துடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 108 மற்றும் இதர விதிகளுக்கு இணங்க (இது தொடர்பாக தற்சமயம் அமலில் உள்ள ஏதேனும் சட்டபூர்வமான திருத்தங்கள் அல்லது மறு நடைமுறையாக்க விதிகள் உட்பட) மற்றும் அத்துடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டிய கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் விதிகள், மற்றும் 2014-ன் விதி 20 மற்றும் 22-க்கு ('விதிகள்') இணங்க, SEBI அமைப்பின் (கட்டுப்பாடுகள் பட்டியலிடுதல் மற்றும் தெரிவிக்க வேண்டிய அம்சங்கள்) நெறிமுறைகள், 2015 (பட்டியலிடுதல் நெறிமுறைகள்) திருத்தத்தின்படி நெறிமுறை 44-க்கு இணங்கவும், கம்பெனி செக்ரட்டரிஸ் ஆஃப் இந்தியா வழங்கிய திருத்தத்தின்படியான பொதுக்கூட்டங்கள் (SS-2) மீதான செயலக தரம் மற்றும் நிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகத்தின் பின்வரும் சுற்றறிக்கைகள் (நிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கைகள்) அதாவது பொது சுற்றறிக்கை எண்.14/2020 தேதி 8 ஏப்ரல் 2020, பொது சுற்றறிக்கை எண்.17/2020 தேதி 13 ஏப்ரல் 2020, பொது சுற்றறிக்கை எண். 22/2020 தேதி 15 ஜூன் 2020, பொது சுற்றறிக்கை எண்.33/2020 தேதி 28 செப்டம்பர் 2020, பொது சுற்றறிக்கை எண்.39/2020 தேதி 31 டிசம்பர் 2020, பொது சுற்றறிக்கை எண் தேதி.10/2021 23 ஜூன் 2021, பொது சுற்றறிக்கை எண்.20/2021 தேதி 8 டிசம்பர் 2021, 3/2022 தேதி மே 5, 2022, பொது சுற்றறிக்கை எண்.11/2022 தேதி 28 டிசம்பர் 2022 மற்றும் 09/2023 தேதி செப்டம்பர் 25, 2023 மற்றும் 09/2024 தேதி செப்டம்பர் 19, 2024 (மொத்தமாக 'MCA சுற்றறிக்கைகள்') மற்றும் இதர பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்கும் விதத்தில் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவெனில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தக நடவடிக்கைக்கு தபால் வாக்குப்பதிவின் மூலம், ரிமோட் இ-வோட்டிங் செயல்முறை வாக்களிப்பின் வழியாக (தொலைதூர இ-வோட்டிங் என்கிற தபால் வாக்கெடுப்பு) ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைடு இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் (தி கம்பெனி) உறுப்பினர்களிடமிருந்து சிறப்பு மற்றும் சாதாரண தீர்மானம் மூலம் ஒப்புதல் கோரப்படவுள்ளது.

தீர்மானம் பற்றிய விவரம்	தீர்மானத்தின் வகை
நிர்வாகமற்ற சுயாதீன இயக்குநர் மற்றும் வாரியத் தலைவரான திரு. ராஜீவ் கெர் (DIN: 01192524) அவர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்திற்கான ஒப்புதல்.	சிறப்பு தீர்மானம்
2025-2026 நிதியாண்டிற்கான நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி (MD & CEO) திரு. ஆனந்த் ராய் (DIN: 08602245) அவர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்திற்கான ஒப்புதல்.	சிறப்பு தீர்மானம்
நிறுவனத்தின் முழுநேர இயக்குநராக தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி திரு. ஹிமான்ஷு வாலியா-ஐ (DIN: 11101338) நியமித்தல் மற்றும் 2025-2026 நிதியாண்டுக்கான ஊதிய ஒப்புதல் அளித்தல்.	சிறப்பு தீர்மானம்
நிறுவனத்தின் முழுநேர இயக்குநராக தலைமை இயக்க அதிகாரி திரு. அமிதாப் ஜெயின்-ஐ (DIN: 11101339) நியமித்தல் மற்றும் 2025-2026 நிதியாண்டுக்கான ஊதிய ஒப்புதல் அளித்தல்.	சிறப்பு தீர்மானம்
இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரிய (பங்கு அடிப்படையிலான ஊழியர் நலன்கள் மற்றும் ஸ்வெட் ஈக்விட்டி) ஒழுங்குமுறைகள், 2021 இன் அட்டவணை I, பகுதி C, பிரிவு (q) இன் கீழ் தேவைப்படும் அறிக்கையை பரிசீலித்து கவனத்தில் கொள்ளுதல்.	சாதாரண தீர்மானம்

ஜூலை 25, 2025 அன்று அலுவல் முடிவடையும் நேரம் (கெடுத் தேதி) எந்தெந்த பங்குதாரர்கள் தங்களுடைய பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரியில் டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள்/கம்பெனி/பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA) அதாவது KFin டெக்னாலஜிஸ் லிமிடெட் (முன்பு KFin டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் என்றும் அழைக்கப்பட்டது) வசம் பதிவு செய்து உள்ளார்களோ அந்த பங்குதாரர்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள நிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க தபால் வாக்கெடுப்பு அறிவிப்பு மற்றும் இணைப்புகள் மின்னஞ்சல் வழியாக அனுப்பி வைக்கப்படும். கெடுத் தேதி அன்று பங்குதாரராக இல்லாத மற்றவர்களுக்கு இந்த அறிவிப்பு தகவலுக்காக மட்டுமே.

தொலைதூர இ-வோட்டிங் நடைமுறை பற்றிய அறிவிப்பு நிறுவனத்தின் www.starhealth.in இணையதளத்திலும் NSDL-இன் www.evoting.nsdl.com மற்றும் CDSL-இன் www.evoting.india.com ஆகிய இணையதளங்களிலும் BSE லிமிடெட் மற்றும் தேசிய பங்கு சந்தை ஆகியவற்றின் தளங்களான முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com இணையதளங்களிலும் KFinTech-ன் https://evoting.kfintech.com இணையத்தளத்திலும் காணக் கிடைக்கும்.

நிறுவனமானது தங்களுடைய அனைத்து உறுப்பினர்களுக்கும் இ-வோட்டிங் வசதியை அளித்திட "KFinTech"-ன் சேவை பணிகளைப் பெற்றுள்ளது. உறுப்பினர்கள் இ-வோட்டிங் மூலம் மட்டுமே வாக்களிக்க இயலும் என்பதால், அறிவிப்பின் காகித வடிவ நகல்கள், தபால் வாக்கு படிவங்கள், கட்டணம் செலுத்தப்பட்ட பதில் உறைகள் ஆகியவற்றை அனுப்பி வைக்க வேண்டிய அவசியமில்லை.

விதிகள் SS-2 மற்றும் நிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க உள்ள விவரங்கள் பின்வருமாறு:

a) **இமெயில் முகவரியைப் பதிவு செய்யும் / அப்டேட் செய்யும் முறை**

i) பங்குகளை பிசிக்கல் வடிவில் வைத்துள்ள உறுப்பினர்கள் அறிக்கையின் மின்னணு நகல் மற்றும் இ-வோட்டிங்கிற்கான குறிப்புகளை யூசர் ID மற்றும் பாஸ்வேர்டு ஆகியவற்றுடன் சேர்த்து பெறுவதற்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி இ-மெயில் முகவரி மற்றும் மொபைல் எண்ணை பதிவேடுக்கச் செய்வதற்கான வழிமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உறுப்பினர்கள் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதனை einward.ris@kfintech.com-க்கு எழுதலாம்.

ii) டிமெட்டீரியலைஸ்டு என்கிற வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள், தங்கள் டிமேட் கணக்கை பராமரித்து வருகிற உரிய டெபாசிட்டரி பங்கேற்பாளர் வசம் தங்கள் இ-மெயில் முகவரிகளைப் பதிவு/அப்டேட் செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

b) **இ-வோட்டிங் மூலம் வாக்களிக்கும் நடைமுறை**

அறிவிப்பில் கண்டுள்ள செயல்கள் குறித்து தொலைதூர முறையில் உறுப்பினர்களுக்கு தங்கள் வாக்கு செலுத்த வாய்ப்பு உண்டு. அறிவிப்பில் உள்ள அதற்கான விரிவான நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். இத்தகைய விவரங்கள் நிறுவனத்தின் இணையதளத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன.

c) இ-மெயில் பதிவு செய்து, தொலைதூர வாக்கு அளிக்க, தபால் வாக்கு அறிவிப்பு, யூசர் ஐடி, பாஸ்வேர்ட் கிடைக்கப் பெறாத ஏதேனும் உறுப்பினர், அவற்றைப் பெற, einward.ris@kfintech.com அல்லது investors@starhealth.in-க்கு Client ID, DP ID, PAN என்பதை கொடுத்து தங்களுடைய பதிவு செய்த இ-மெயில் முகவரியிலிருந்து எழுத வேண்டும்.

d) தொலைதூர இ-வோட்டிங் வசதி பின்வரும் இணைய இணைப்பில் உள்ளது - https://evoting.kfintech.com

e) தொலைதூர இ-வோட்டிங் - **சனிக்கிழமை, ஆகஸ்ட் 2, 2025 அன்று இந்திய நேரப்படி காலை 10:00 மணிக்கு தொடங்கி, ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 31, 2025 அன்று இந்திய நேரப்படி மாலை 5:00 மணிக்கு** முடிவடையும். மேற்குறிப்பிட்ட கால நேர அளவுக்கு பின் உறுப்பினர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். உறுப்பினர்களின் வாக்குரிமையானது கெடுத் தேதி அன்று நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் அவர்களுக்குள்ள பங்குகளின் விகிதாசாரத்தில் அமையும்.

f) தீர்மானத்தின் மீது ஒரு முறை வாக்கு செலுத்திய பின்னர், உறுப்பினர், அதை மாற்றிக் கொள்ளவோ மீண்டும் வாக்களிக்கவோ அனுமதிக்கப்பட மாட்டாது.

g) நிறுவனமானது இ-வோட்டிங் மூலம் தபால் வாக்குப்பதிவு நடைமுறையை நடத்தும் கூர்ந்தாய்வாளர் ஆக திரு. மிர்சா இன்மாயில் இர்ஷாத் அகமத், தனி உரிமையாளர், M/s. இர்ஷாத் அண்டு அசோசியேட்ஸ் ப்ராக்டிஸ் செய்யும் நிறுவன செயலர் அவர்களை நியமனம் செய்துள்ளது (அவரது உறுப்பினர் எண். F11458, CP No: 24586)

h) இ-வோட்டிங் தொடர்பான விசாரணைகளுக்கு KFinTech இணையதளமான https://evoting.kfintech.com-ல் உறுப்பினர்களுக்கான "FAQs" sectionஐயும், evoting user Manual-ல் "Download" sectionஐயும் பார்வையிடவும் அல்லது KFinTech-ஐ 1800 309 4001 (டோல் ஃப்ரீ) எண்ணை அழைக்கவும் அல்லது KFinTech-ன் கார்ப்பரேட் ரெஜிஸ்ட்ரியின் திரு. முகமது ஷனூர் அவர்களை mohammed.shanoor@kfintech.com-ல் தொடர்பு கொள்க. (Unit: Star Health and Allied Insurance Company Limited), செலினியம் டவர் B, பிளாட் 31-32 கச்சிபவுலி, நிதி மாவட்டம், நானாக்ராம்குடா, செரிலிங்கம்பள்ளி, ஹைதராபாத் - 500 032 - இ-மெயில் முகவரி - einward.ris.kfintech.com அழையுங்கள் KFinTech டோல் ஃப்ரீ எண் - 1-800-309-4001.

i) நிறுவனமானது முடிவுகளை திங்கட்கிழமை, செப்டம்பர் 01, 2025 அன்று மாலை 5:00 மணிக்கு முன்பாக தங்களுடைய https://starhealth.in இணையதளத்தில் அறிவிக்கும். மேலும், கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகளுக்கும் தெரிவிக்கும்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஸ்டார் ஹெல்த் அண்டு அலைடு இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்-க்காக

Sd/-
ஜெயஸ்ரீ சேதுராமன்
கம்பெனி செயலர் மற்றும் இணக்க அலுவலர்

இடம்: சென்னை
தேதி: ஆகஸ்ட் 01, 2025

ஞாயிற்றுக்கிழமைதோறும் **தினமணி கதிர்** இளமை! புதுமை! இனிமை!